# பொதுக்காலம் 27ஆம் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் மீது இறையாட்சியும் ஆசியும் பொழியப்படும் என்பதை உணர்ந்திட இன்றைய பொதுக்காலம் 27ஆம் ஞாயிறு வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது.

திராட்சைத் தோட்டத்தை உரிமையாக்கிக் கொள்ள உரிமையாளர்க்கு உண்மையாய் இருக்க வேண்டும். மாறாக, உரிமையாளரைக் கொன்றுவிட்டால், அனைத்தும் நம்மிடம் இருந்து பிடுங்கப்பட்டு விடும். இவ்வுலக வாழ்வில் இறைவனுக்குப் பயந்து உண்மை வாழ்வை மேற்கொள்வோம்.

இன்றைய முதல் வாசகத்தில், இவ்வுலக வாழ்வில் நாம் தர வேண்டிய ஈவுகளைப் பற்றியும், தர மறுத்தால் எதிர்கொள்ள வேண்டிய தீர்ப்பினைப் பற்றியும் எசாயா இறைவாக்கினர் எடுத்துரைக்கின்றார். மனிதன் மகிழ்ந்திருக்கத் தேவையான அனைத்து வளங்களையும் இறைவன் அளித்திருக்கிறார். அவற்றை பெற்று வளமான வாழ்வை மேற்கொண்டு, நம் வாழ்வால் பிறருக்கும் அதனால் இறைவனுக்கும் ஆனந்தத்தை ஏற்படச் செய்வோம். அவ்வாறில்லாமல் நான், எனது என வாழ்வைச் சுருக்கிக் கொண்டால், கனிகொடா திராட்சைத் தோட்டத்தின் பலனே நமக்கும் கிடைக்கும்.

இன்றைய நற்செய்தியில், “கட்டுவோர் புறக்கணித்த கல்லே மூலைக்கல் ஆயிற்று” என்று மேட்டிமை எண்ணம் பெற்றிருப்பவர்களுக்கு எச்சரிக்கின்றார் இயேசு. இவ்வுலகமே திராட்சைத் தோட்டம். நாம் இயேசு பணித்த பணியாளர்கள்.

நற்கனிகளை விதைக்க

நல் உழைப்பை விதைப்போம்.

நல் எண்ணம் பெற்று

நாமும் வளர்ச்சியடைவோம்.

திண்ணமான எண்ணத்தோடு

தூய்மையாய் வாழ்வோம்.

இச்சிந்தனைகளை மனதில் கொண்டு, பலியில் பங்கேற்போம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. நற்கனிகளை கொடுக்க அழைப்பவரே எம் இறைவா!

எம் திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், தங்கள் அழைப்பின் மேன்மையை உணர்ந்து, திராட்சைத் தோட்டத்தை வளப்படுத்தி, பணியாளர்களாகிய இவ்வுலக மக்களுக்கு நடக்க வேண்டிய வழியைக் காட்டி, முன்சென்று வழிநடத்தவும் வல்லமை அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நற்கனி கொடுக்க அழைப்பவரே எம் இறைவா!

எம் நாட்டினை ஆளும் ஆட்சியாளர்கள், அரசியல் தலைவர்கள், அதிகாரப் போக்கில் நாட்டை ஆளாமல், சாலமோன் போல உம் ஞானத்தைப் பெற்றவர்களாக, மக்களை நேரிய வழிநடத்தவும், நாட்டை வளர்ச்சிப் பாதையில் வழிநடத்த வேண்டிய ஞானம் தந்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. “புறக்கணித்த கல்லே மூலைக்கல்லாயிற்று” என்றவரே எம் இறைவா!

மது, போதை மற்றும் தவறான பழக்க வழக்கங்களில் சிக்கித் தவித்து, சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களாய் வாழும் இளைஞர்களை சிறந்த வழியில் நடத்தி, பணியில் மூலைக்கல்லாகிட வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. ஆசியைப் பொழிபவரே எம் இறைவா!

எம் பகுதியில் முதன்மைத் தொழிலான வேளாண்மை சிறந்து பொருளாதாரம் ஏற்றம் பெறவும், நோய்த் தொற்று குறைந்து, மக்களின் இயல்பு வாழ்வு திரும்பவும், குடும்ப அமைதி, மகிழ்ச்சி பெருகவும், படிக்கும் மாணவர்களின் எதிர்கால குழப்பங்கள் சரியாகவும் , உள்ளத்தின் வேண்டுதல்கள் இறைவன் ஆசியால் நிறைவேறவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com